18.08.2023

MCOP.No.33/2020

Witness of PW1

திருமதி. பாவலா, கணவர் பெயர். சுப்பையா

இ.நி மனு 1/23 அனுமதிக்கப்பட்டதன் பேரில் ம.சா.1 மீண்டும் வரவைழக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறக்க விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

1ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை=

07.02.2020 அன்று என் மகன் சபரிநாதன் அடிப்பட்டு இருந்து ஆட்டோவில் அழைத்து வரப்பட்டார். ஆட்டோவில் இருந்து இறங்கிய பின் அவர் நண்பர்கள் அவரை கைதாங்ளாக நடத்தி அழைத்து வந்தார்கள். சுமார் இரவு 9.00 மணிக்கு மேல் வந்தார்கள். வீட்டிற்கு வந்தபின்அவருடைய நண்பர்கள் என் மகனுக்கு உடை மாற்றினார்கள். அப்போழுது அவர் சிறுநீர் கழிக்கும் இடத்தில் ரத்தம் வடிந்ததாக சொன்னார்கள். என்னுடைய மூல விசாரணையில் என் மகன் குளித்துவிட்டு உடை மாற்றும் போது தான் சிறுநீர் கழிக்கும் இடத்தில் ரத்தம் வருவதாக சொன்னதாக சொல்லியுள்ளேன். என் மகன் குடித்திருந்தாரா என்று தெரியாது. நண்பர்கள் தான் அவரை குளிக்க வைத்தார்கள். என் மகனை குளித்த பின்பு அவருடைய நண்பர்கள் தூக்கி ஆட்டோவில் வைத்து பின் மருத்துவமனைக்கு சென்றேன். விபத்து குறித்து அப்பத்தூர் போலிசார் போன் செய்தார்கள். என் மகனின் நண்பர் கார்த்திக் விபத்து சம்மந்தமாக போன் செய்தார். போலிசார் என்னிடம் என் மகன் பைக்கில் இருந்து விழுந்துவிட்டதாக சொன்னார்கள். 1ம் எதிர்மனுதாரர் ஆகாஷை எனக்கு தெரியும். அவரின் தொலைபேசி எண் எனக்கு தெரியும். என் மகனும் ஆகாஷும் நெருங்கிய நண்பர்கள். விபத்து சம்மந்தமாக ஆகாஷிடம் அன்றையதினம் தொடர்பு கொண்டேன். போனை எடுக்கவில்லை. மீண்டும் முயற்சிக்கவில்லை. 2 நாட்கள் கழித்து அவரே என்னை தொடர்பு கொண்டார். விபத்து குறித்து நேரடியாக தெரியாது. ட்ராபிக் இன்பெக்டர் சொல்லிதான் அந்த சங்கதிகள் தெரியவந்தது. நான் சென்னை ராஜீவ் காந்தி மருத்துவ மனை மற்றும் இரு வேறு

மருத்துவமனைகளிலும், பைக்கில் இருந்து என் மகன் கீழே விழுந்து அடிப்பட்டது என்று சொன்னேன். மருத்தவமனைக்கு நான், என் மகள், என் மகன் மற்றும் அவருடைய இரு நண்பர்கள் பக்கத்தில் உள்ள மருத்துவமனைக்கு சென்றோம். என் மகன், நான் சொல்லியவாறு மோட்டார் சைக்கிளில் இருந்து கிழே விழுந்து அடிப்பட்டு அதன் காரணமாக விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்தார்கள். முதல் தகவல் அறிக்கையை யாா ்பதிவு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. விபத்து குறித்து புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்தோம். நஷ்ட ஈடு பெறவேண்டும் என்ற நோக்கத்தில் தான் விபத்து நடந்ததாக பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல

மறுவிசாரணை இல்லை.